**மில்லனிய பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மில்லனிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மில்லனிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் பந்தி இலக்கம் 3.27 முதல் 3.32 இற்கிடையிலான பந்திகளுக்கு இணங்காத வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் மிகையினை சீராக்கும் போது ரூபா 1,367,315 ஆன முதலீட்டு வருமானம் குறைத்துக் | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| காண்பிப்பதற்கு பதிலாக ரூபா 1,750,745 ஆக சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) நியமத்தின் பந்தி இலக்கம் 3.6 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய ஆண்டிற்கு சமமான தகவல்கள் காண்பிப்பதற்குப் பதிலாக 2021 ஆம் ஆண்டின் தகவல்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட மின்சாரக் களஞ்சிய இருப்பு மற்றும் காகிதாதிகள் இருப்பு முறையே ரூபா 817,069 மற்றும் ரூபா 306,521 மீண்டும் களஞ்சிய முற்பண இருப்பு மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தவறுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2022 ஆம் ஆண்டில் மூலதன மானியப் பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 497,060 அதிகரித்து வருமானத்தில் இனங்காணப்பட்ட தவறை சரிசெய்யும் போது திரண்ட நிதியத்தில் வரவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்கான பெறுவனவுக் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | மூலதன மானியப் பெறுவனவுகள் சரியாக வருமானத்தில் இனங்காணப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் மோட்டார் வாகனம், கணனி, அலுவலக உபகரணம், பாத்திரங்கள் மற்றும் உபகரணம், வீதிகள், மதகுகள் மற்றும் நூலகப் புத்தகங்களின் | - மேற்படி - | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத் தேய்வு ரூபா 6,134,086 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 6,073,119 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அலுவலக உபகரண பெறுமானத் தேய்வு ஒதுக்கம், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடுகள் முறையே ரூபா 675,998 இனாலும், ரூபா 246,646 இனாலும் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 792,629 ஆக அதாவது ரூபா 116,631 அதிகரித்தும், ரூபா 584,924 ஆக அதாவது ரூபா 338,278 அதிகரித்தும் சீராக்கப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் / பேரேடுகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 9,551,676 வேறுபாடு காணப்பட்டது. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 22 மயான நிலங்கள் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளருக்கு மயான நிலங்களை கையேற்பதற்கு உரிய விண்ணப்பங்கள் | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 திசம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களின் எரிபொருள் எரிவு வருடாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் பரிசோதனை 2024 ஆம் ஆண்டின் போது மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | 2019 திசம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2155/8 என்ற வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 299 | மீளாய்வாண்டின் மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்தப்படாத நிர்மாண வரி மற்றும் வியாபார வரியின் கீழ் ஆதனங்கள் மற்றும் புறக்கணித்தல் தொடர்பாக நிரல் ஒன்று தயாரித்து ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் சபையின் செயலாளருக்கு அறிக்கை யிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | - மேற்படி - |
| (ஈ) | 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 01/2016 என்ற மேல் மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கையின் 2.2.3 மற்றும் 2.2.5 ஆம் பந்திகள் | சபையின் கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்காக பெறப்பட்ட கூறுவிலைகளின் நியாயமான தன்மை இயந்திர பொறியியலாளரினால் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் பழுதுபார்த்தல் தொடர்பாக ஏற்றுக்கொள்ளும் வகையில் சாரதியிடமிருந்து உறுதிப்படுத்தலும் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,445,211 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,637,183 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2023<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 4,440,600 | 4,025,951 | 4,024,801 | 1,150 | 3,197,440 | 4,433,669 | 4,366,325 | 67,345 |
| (ii) | வாடகை | 342,000 | 189,190 | 189,190 | - | 402,000 | 218,362 | 218,362 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 610,050 | 345,750 | 345,750 | - | 1,379,050 | 344,090 | 339,590 | 4,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,810,550 | 9,405,239 | 9,405,239 | - | 39,661,100 | 37,296,591 | 32,847,465 | 4,449,126 |
| | மொத்தம் | 17,203,200 | 13,966,130 | 13,964,980 | 1,150 | 44,639,590 | 42,292,712 | 37,771,742 | 4,520,971 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஏனைய வருமானம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,202,500 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,237,656 ஆகும். | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்த வியாபார நிறுவனங்கள் 35 இற்கு உரிய மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உணவு மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்க்கும் போது பட்டியல்களுக்கு மேலதிகமாக உரிய உணவு மாதிரிகளின் தரப்பரிசோதனை பெறுபேறுகளை உள்ளடக்கிய அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அறிக்கையைப் பெற்று பிரச்சினைகள் உள்ள நிறுவனம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 3,200,000 ஆன யாலகல பண்சல மாவத்தையில் தார் இட்டு அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய அளவிடை பத்திரங்கள் மற்றும் மூலப் பொருள் மற்றும் ஊழியர் செலவின மதிப்பீடு பரிந்துரையும் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளாமல் செற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் கணக்காய்வினால் விசாரணை செய்யப்பட்ட பின்னர் அந்த ஆவணங்களுக்கு உரிய உத்தியோகத்தர்கள் கைச்சாத்திட்டிருந்தனர். | உரிய உத்தியோகத்தர்களினால் பரிந்துரை செய்யப்பட்ட அங்கீகாரம் வழங்கப்படும் போது கையொப்பமிடப்படும். | ஒப்பந்த நிருவாகத்தை சரியான மேற்பார்வை செய்தல் வேண்டும். |